**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 176/2022 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 3 |
| Name : | திரு. பிச்சைமணி ( காவல் உதவி ஆய்வாளர்) |
| Father's/Husband Name: | திரு. செல்வராஜ் |
| Village : | மருவத்தூர் காவல் நிலையம் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 53/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 27.02.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1,2 மற்றும் 4 ஆஜர் இல்லை. அவர்களுக்காக 317 குவிமுச மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. 3ம் எதிரி இறந்து போய்விட்டதனால் அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது)**

**முதல் விசாரணை**

i) நான் தற்போது மருவத்தூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.01.2022ம் தேதி அன்று கைகளத்தூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது ராமச்சந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று அதனை பரிசீலனை புகாரின் தன்மையின் அடிப்படையில் கைகளத்தூர் காவல் நிலைய குற்ற எண் 20/2022 இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) r/w 4 of TNPHW ACtன்படி வழக்கு பதிவு செய்தேன். நான் **நிலையத்தில் பதிவு செய்துள்ள முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ராமலிங்கம், அம்மணி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடம் குறித்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளேன். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ4**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் ராமச்சந்திரன், ஜெயந்தி, சுந்தரராஜன், ஜோதிவேல், மணிகண்டன், ராமலிங்கம், அம்மணி ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். இவ்வழக்கு எதிரிகளை தேடி வந்த நிலையில் பெரம்பலூர் அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று தக்க நீதிமன்றத்தில் ஆஜராகி பிணையில் சென்றுவிட்டதால் எதிரிகளை கைது செய்யவில்லை. அ.சா.1க்கு மருத்துவமனையில் சிகிச்சை அளித்த மருத்துவர் பிரபு என்பவரை விசாரணை செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று ஒன்று பெற்றேன். அந்த **காயச்சான்று அ.சாஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில் எதிரிகளின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) r/w 4 of TNPHW Act ன்படி கடந்த 09.04.2022ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 கொடுத்த பொய் புகார் வாக்குமூலத்தை சரியாக விசாரணை செய்யாமல் சம்பவயிடம் சென்று விசாரணை செய்யாமல் அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.